புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2047 | டிசம்பர் 29, 2016 | புரட்சி 15 | முழக்கம் 50 | விலை: ரூ.3.00

# இறை நம்பிக்கையாளர்களையும் இன உணர்வாளர்களையும் இணைத்தது - சேலம் மாநாடு




**இந்து மதத்துக்கு தாங்களே உரிமைக் குரியவர்கள் போல் வெகுமக்களை ஏமாற்றி வந்த பார்ப்பனிய மிரட்டலுக்கு பதிலடி தந்துள்ளது சேலம் மாநாடு.**

வேத மரபினை மறுப்போம், வெகு மக்கள் உரிமைகளை மீட்போம் என்கிற பார்ப்பன இந்துத்துவ எதிர்ப்பு இலட்சிய முழக்கத்தை முன் வைத்து சேலம் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் சித்தர்கள், வள்ளலார், பெரியார் அடிச்சுவட்டில் வேத மரபு மறுப்பு மாநாடு டிசம்பர் 24, 2016 அன்று சேலம் போஸ் மைதானம் அருகில் உள்ள நேரு கலையரங்கத்தில் இசை நிகழ்ச்சி, கருத்தரங்கம், வீதிநாடகம், கழகத் தலைவருக்கு பிரச்சார ஊர்தி வழங்குதல், புரட்சி பெரியார் முழக்க சந்தா வழங்குதல் கழக கட்டமைப்பு நிதி மற்றும் பொது மாநாடு எழுச்சியுடன் நடைபெற்றது.

முன்னதாக தந்தை பெரியாரின் 40ஆவது நினைவு நாளை முன்னிட்டு சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் உள்ள தந்தை பெரியார் சிலைக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், தோழர்களுடன் சென்று மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.

மாநாட்டின் துவக்கத்தில் பள்ளத்தூர் நாவலரசன் மற்றும் மேட்டூர் டி.கே. ஆர். குழுவினரின் பகுத்தறிவு இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

*பிறப்பினில் பேதம் இல்லை என்பதே*
*வள்ளுவன் சொன்ன நெறியாகும்*
*பிறப்பினை வைத்தே ஜாதியை வகுத்தது*
*பகவத் கீதையின் மொழியாகும்*
*எல்லோரும் இந்து என்று சொல்லியே*
*ஏய்ப்பது பார்ப்பன சூழ்ச்சி வலை*
*அதை எதிர்த்தே வென்று அறுப்பது தானே*
*எங்கள் பெரியார் கொள்கை அலை*
*வேத மரபினை மறுப்போம்*
*வெகு மக்கள் உரிமையை மீட்போம்*
*சித்தர்கள், வள்ளலார், பெரியார் அடிச்சுவட்டில்*
*வேத மரபினை மறுப்போம்*

என பள்ளத்தூர் நாவலரசனின் வெண்கலக்குரல் ஆயிரக்கணக்கில் திரண்டிருந்தவர்களிடையே இம்மாநாட்டின் நோக்கத்தையும் தேவையையும் பறை சாற்றுவதாக இருந்தது. தோழர்கள் மேட்டூர் கோவிந்தராஜ், இசைமதி, முத்துக்குமார் பாடிய ஜாதி ஒழிப்பு - பெண்ணுரிமைப் பாடல்கள் பார்வை யாளர்களுக்கு எழுச்சியூட்டின.

மாநாட்டின் முதலாவது கருத்தரங்க அமர்வு கபிலர், திருமூலர் அரங்கில் தொடங்கியது. பொதுச் செயலாளர், விடுதலை இராசேந்திரன் நெறியாளராக செயல்பட்டார். சேலம் மாநகர தலைவர், மாநாட்டின் வெற்றிக்கு அயராது உழைத்த த. பரமசு வரவேற்புரை ஆற்றினார். கழகச் செயல் வீரர்கள் சேலம் கிழக்கு மாவட்ட தலைவர் க. சக்திவேல், சேலம் மேற்கு மாவட்ட தலைவர் கு. சூரியகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கருத்தரங்கை தொடங்கி வைத்து கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் தொடக்க உரையாற்றினார்.

வேத மரபுகள் மறுப்பு 'வேத புராண காலத்தில்' என்கிற தலைப்பில் கழக வெளியீட்டுச் செயலாளர் கோபி. இராம. இளங்கோவன் உரையாற்றினார். அவர் தமது உரையில், "பார்ப்பனர்களால் உண்டாக்கப்பட்டது நான்கு வேதங்கள் ஆகும். அதில் யசுர் வேதம் வேள்விகளை செய்தல் முறையை பற்றியும், ரிக்வேதம் பாடல்கள் மூலம் துதித்தலையும், சாம வேதம் பாவ நிவாரணங்கள் பற்றியும், அதர்வண வேதம் சபிக்கும் மந்திரங்களையும் கூறுகின்றது. இந்திரனை பற்றி மூவாயிரம் பாடல்களும், அக்னியை பற்றி இரண்டாயிரம் பாடல்களும் எழுதப்பட்டன. அன்றைய தொல்குடி மக்களுக்கும், உழைக்கின்ற நம் மக்களுக்கும் எந்த நன்மையும் இப்பாடல்களால் கிடைக்கவில்லை. மாறாக ஆரிய பார்ப்பனர்களின் சுகபோக வாழ்க்கைக்கும், உழைக்காமல் உண்பதற்கும், திராவிட தொல்குடி மக்களை அடிமைப் படுத்துவதற்குமே பயன்பட்டது. அன்றைய காலக்கட்டத்தில் வாழ்ந்த தொல்குடிகளான திராவிட மக்களின் கடவுள், மத, சடங்குகள் இல்லாதவராகவே வாழ்ந்தனர். ரிக் வேதத்தில் 4617-வில் திராவிட மக்களின் கடவுள், மத, சடங்கு நம்பிக்கை இல்லாமல் வாழ்ந்ததை குறிப்பிட்டு அம்மக்களை பூண்டோடு அழித்து சாம்பலாக்க வேண்டும் என கூறுகிறது. வேத காலத்திலேயே வேத மரபுகளை மறுத்த நான்கு முக்கிய கோட்பாடுகள் இருந்தன. காணாதர் உருவாக்கிய வைசேசிகம், கௌதமரின் நியாய கோட்பாடு, கபிலரின் சாங்கியம், சிரண்ய காம்பனின் யோக மரபு என இருந்தது. இந்தமரபுகள் உலகம் அணுக்களால் உண்டானது என்றும் பகுத்தறிவோடு சிந்திக்க வேண்டும் என்ற தத்துவங்களை சொல்லி பார்ப்பன வேத மரபிற்கு எதிரான அறிவியல் கருத்துக்களை பரப்பியது. ஆனால் பார்ப்பனியம் - அத்தனை சிந்தனைகளையும் ஒடுக்கியது" என்று குறிப்பிட்டார்.

**மருத்துவர் தாயப்பன்**

பவுத்த, சமண நெறிகளில் வேத மரபு மறுப்பு என்கிற தலைப்பில் மருத்துவர் அ. தாயப்பன் உரையாற்றினார். அவர் தனது உரையில்,

"வேதங்கள் அனைத்தும் வர்ணாசிரம தர்மத்தை தான் சொன்னது. வர்னாசிரம தர்மம் தான் ஜாதியை தோற்றுவித்தது. ஜாதிகள் ஒழிக்கப்பட வேண்டும் என்றால் ஜாதிகளுக்கு அடித்தளமாக இருக்கும் வேதங்கள் ஒழிக்கப்பட வேண்டும். பார்ப்பன வேதங்களுக்கு எதிராக முதல் எதிர்ப்புக் குரலை பவுத்தம் செய்தது. ஆனால், அந்த பவுத்தத்தையும் பார்ப்பன இந்து மதம் உட்செரித்துக் கொண்டது.

புரட்சியாளர் அம்பேத்கர், 'நான் ஓர் இந்துவாக சாக மாட்டேன்' என்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பிரகடனம் மூலம் பவுத்தத்தை உட்செரித்த பார்ப்பன இந்து மதத்தின் அடிவயிற்றை கிழித்தெறிந்து மீண்டும் பவுத்தத்தை தழைக்கச் செய்தார். அம்பேத்காரின் முயற்சிக்கு பெரியார் தனது ஆதரவை அளித்து தோளோடு தோளாக நின்றார். எனவே, பெரியார் அம்பேத்கர் துணை யோடு அவர்கள் காட்டிய வழியில் பார்ப்பன வேத இந்து மதத்தையும், பார்ப்பன வேத மரபுகளையும் நாம் வேரறுக்க வேண்டும்" எனக் கூறினார்.

**முனைவர் சி. இளங்கோ**



சித்தர்களின் பாடல்களில் வேத மரபுகள் மறுப்பு என்கிற தலைப்பில் முனைவர். சி. இளங்கோ உரையாற்றினார். அவர் தனது உரையில், "பார்ப்பன வேத மதமான இந்து மதம் சித்தர்களையும், அவர்களின் வேத மரபு மறுப்பு பாடல்களையும் திட்டமிட்டு அழித்து சித்தர்களையும் அவர்களின் தத்துவங்களையும் இருட்டடிப்பும் செய்துவிட்டது. 19-ம் நூற்றாண்டில் தான் சித்தர்களில் பாடல்கள் அச்சிடப்பட்டன. சித்தர்களின் ஞானகோவை என புத்தகங்களாகவும் வந்தன. 'சாதிப் பிணியில் தீயை

(3ஆம் பக்கம்)

# வேத மரபுக்கு எதிராகப் போர்க்குரல்!





# சேலம் மாநாட்டு களத்திலிருந்து...

- திராவிடர் விடுதலைக் கழகம் இதுவரை நடத்திய மாநாடுகளி லிருந்து தனித்துவம் பெற்ற மாநாடாக வேதமரபு மறுப்பு மாநாடு இருந்தது.
- மாநாட்டு அரங்குகளில் வேத மரபை மறுத்த கபிலர், திருமூலர், வள்ளார் கருத்துகளும், நூற்றாண்டு காணும் எழுத்தாளர் விந்தன் எழுதிய 'பெரியார் அறிவுச்சுவடி'யில் இடம் பெற்ற வாசகங்களும் பதாகைகளில் எழுதப்பட்டிருந்தன. இவர் களுடன் பெரியார், அம்பேத்கர், புரட்சிக் கவிஞர் கருத்துகளும் வைக்கப்பட்டிருந்தன.
- காலை அமர்வு நடந்த அரங்கிற்கு கபிலர், திருமூலர் அரங்கு என்றும், மாலை நடந்த திறந்தவெளி மாநாட்டு அரங்கிற்கு தவத்திரு குன்றக்குடி அடிகளார் அரங்கு என்றும் பெயர் சூட்டப்பட் டிருந்தது. இறை நம்பிக்கைக் கொண்ட வேத மரபுகளை எதிர்த்த பார்ப்பன எதிர்ப்பாளர்களின் பெயர்களும் படங்களும் கடவுள் மறுப்பு தத்துவத்தை ஏற்றுக் கொண்ட பெரியார் இயக்கத்தின் மாநாட்டு மேடைகளுக்கு சூட்டப் பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. பெரியாரின் கடவுள் மறுப்பு தத்துவத்தின் நோக்கம், ஒடுக்கப் பட்ட மக்கள் மீதான இழிவு ஒழிப்பு மற்றும் சமூக உரிமை மீட்பே என்ற உண்மையை இவைகள் உணர்த்தின.
- மாநாட்டு அரங்கைச் சுற்றிலும் பெரியார் சிலை அமைந்த பகுதி களும் ஏராளமான கழகக் கொடிகள் கட்டப்பட்டு பட் டொளி வீசி பறந்து கொண் டிருந்தன.
- டயர்களில் காகிதங்களை ஒட்டி, வட்ட வடிவமான விளம்பரப் பலகையாக்கி, அதில் கருத்துகளை தோழர்கள் எழுதி வழி நெடுக மக்கள் பார்வைக்கு வைத் திருந்தனர்.
- மாநாட்டு அரங்கம் முழுதும் கழக சீருடையுடன் (நீல ஜீன்ஸ் பேண்ட், கருப்புச் சட்டை) திராவிடர் விடுதலைக் கழக இளைஞர்கள் பெண்களும் ஆண்களுமாக நிரம்பி வழிந்தது கண்கொள்ளாக் காட்சி யாகும். பெரியாரியம் தலை முறைகளைக் கடந்து வாழ்வியல் தத்துவமாகி சமுதாய விடுதலைப் போராட்டத்துக்கு புதிய தலை முறை அணியமாயிருப்பதையும் இந்தக் காட்சி உணர்த்தியது.
- மாநாட்டில் கழகத்தின் மாத இதழ் 'நிமிர்வோம்' கழகத்தின் 2017ஆம் ஆண்டுக்கான நாள்காட்டி, 'தலித் முரசு' வெளியீடான அம்பேத்கர் உரைகளடங்கிய 'நான் ஓர் இந்துவாக சாக மாட்டேன்' நூல் ஆகியவை வெளியிடப்பட்டன.
- நோட்டுகள் செல்லாது என்ற அறிவிப்பால் கடும் பணப்புழக்கம் தொழில் நெருக்கடிகளுக்கு உள்ளாகிய நிலையிலும் கழகத் தோழியர்களும் தோழர்களும் மாநாட்டில் பெரும் எண்ணிக்கை யில் திரண்டிருந்தனர்.
- காலை கருத்தரங்கம் முடிவடைந் தவுடன் இடைவெளியின்றி 'விரட்டு' நாடகக் குழுவினரின் நாடகம் மற்றும் கலை நிகழ்ச்சிகள் தொடங்கிவிட்டன. நாடகமும் பாடல்களும் தோழர்களை உணர்ச்சிக்குள்ளாக்கின.
- மதிய உணவிற்கு அசைவ உணவை குறைந்த விலையில் கிடைக்க மாநாட்டுக் குழுவினர் ஏற்பாடு செய்திருந்தனர்.
- மாநாட்டையொட்டி சேலம் மாநகர் முழுதும் கடைகடையாகச் சென்று மாநாட்டு துண்டறிக்கை களை கொடுத்து தோழர்கள் நன்கொடை திரட்டினர். நகரத்தில் 20,000 மக்களிடம் துண்டறிக்கை களும், 'வேத மரபை ஏன் எதிர்க்க வேண்டும்' என்று துண்டறிக்கை யில் தந்துள்ள விளக்கங்களும் போய்ச் சேர்ந்ததை தோழர்கள் பெருமையுடன் கூறுகிறார்கள். 10 ரூபாய், 20 ரூபாய் என்று சாதாரண மக்களிடம் நன்கொடைகள் திரட்டப்பட்டன. மக்கள் கேட்ட கேள்விகளுக்கு பொறுமையாக விளக்கங்களை அளித்தனர். இதுவே மிகச் சிறந்த பரப்புரைக் களமாகவும் மாறியது.





- அடிமைச் சின்னமான தாலி யகற்றும் நிகழ்வுகள் இதுவரை பெரியார் மேடைகளில் கணவர்களே நீக்குவதாக இருந்தது. திராவிடர் விடுதலைக் கழகத் தோழியர்கள் இன்னும் கூர்மை யாகச் சிந்தித்து, "அது வேண்டாம்; இதை நாங்களே அகற்றுவதுதான் சரியானது" என்று கூறி, அவர்களே அடிமைச் சின்னத்தை கணவர் முன்னிலையில் அகற்றிக் கொண் டனர். இது தாலியகற்றும் நிகழ்வுக்கு புதிய பார்வையைத் தந்தது.
- வடலூர் சுத்த சன்மார்க்க சங்கத் தின் தலைவர் படப்பை இரா.பால கிருஷ்ணன், வள்ளலாரின் வேத மறுப்பு கருத்துகளை விரிவாக எடுத்துரைத்து திராவிடர் இயக்கத் துடன் இணைந்து இதைப் பரப்ப வேண்டும் என்று அழுத்த மாகப் பேசினார். வள்ளலார், கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற கருத்து தவறானது என்றும், அவர் சாகா நிலை அடைந்தார் என்பதே தன்னுடைய கருத்து என்றும் மேடையிலேயே பதிவு செய்தார்.
- 1971ஆம் ஆண்டு சேலத்தில் பெரியார் நடத்திய மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலத்தின்போது பார்ப்பன ஏடுகள் பெரியாருக்கு எதிராக அவதூறுகளை பரப்பின. அப்போது குன்றக்குடி அடிகளார் பெரியார் பக்கம் நின்று, "இன்றைக்கு ஆத்திகம் என்பது உயர்ஜாதி நலன் காப்பது; நாத்திகம் என்பது பார்ப்பனரல்லாதார் நலன் காப்பது" என்று கூறியதை, தோழர் கொளத்தூர் மணி தனது உரையில் சுட்டிக் காட்டினார். திறந்தவெளி மாநாட்டில் பெரியாரும் குன்றக் குடி அடிகளாரும் இணைந்துள்ள படம் பதாகையாக அமைக்கப் பட்டிருந்தது.
- மாநாட்டின் பேரணிக்கு முதலில் அனுமதித்த காவல் துறை மாநாட் டின் முதல் நாள் இரவு 10 மணியளவில் திடீரென அனுமதி மறுத்தது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி தோழர்களுடன் சென்று மாநகர ஆணையாளரிடம் பேசினார். வழக்கம்போலவே இது மேலிட உத்தரவு என்று அதிகாரிகள் கூறினார்கள். அதைத் தவிர அவர் களிடம் வேறு விளக்கமில்லை. பார்ப்பனர்களும் இந்துத்துவ அமைப்புகளும் பேரணிக்கு அனு மதிக்கக் கூடாது என்று காவல் துறைக்கு ஏராளமாக புகார்களை அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது.
- இனி மதவாத நிகழ்வுகள், இந்து முன்னணி அமைப்புகள், மக்களுக்கு இடையூறாக நடத்தும் பரப்புரை, சட்ட விதிகளை மீறி ஒலிபெருக்கி அலறலுக்கு அனு மதிப்பது குறித்து கழகத் தோழர்கள் கண்காணித்து ஒவ்வொரு முறை யும் காவல் துறைக்கு எதிர்ப்பு களைத் தெரிவிக்க வேண்டும் என்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி மீண்டும் வலியுறுத்தினார்.
- மேடை அருகே கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணிக்கு தோழர்கள் வழங்கிய 'மகிழுந்து' தனி மேடையில் நிறுத்தப்பட் டிருந்தது.
- கழக ஏட்டுக்கான நன்கொடை திரட்டல், வாகனம் மற்றும் தலைமைக் கழகத்துக்கு ஆட்டோ வாங்குதல் உள்ளிட்ட கட்டமைப்பு செலவுகளுக்கு நிதி திரட்டும் பணியில் அமைப்பு செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, பொரு ளாளர் திருப்பூர் துரைசாமி, சூலூர் பன்னீர்செல்வம் இரண்டு வார காலம் கழகத் தோழர்களை நேரில் சந்தித்து நிதி திரட்டுவதில் கடுமையாக பணியாற்றினார்.
- மாநாட்டின் தலைப்புகளும் உரைகளும் அடர்த்தியாகவும், தெளிவாகவும், வேதமரபு எதிர்ப்பு வரலாற்றை வெளிச்சம் போட்டு காட்டியதாகவும் பல கழகத் தோழர்கள் கருத்து தெரிவித்தனர்.
- கடும் பனி, குளிர் காற்றுக்கிடையே அவற்றைப் பொருட்படுத்தாது, பொது வெளி மாநாட்டில் தோழர்கள் கருத்துகளை செவிமெடுத்தனர்.
- சேலம் மாநாட்டுப் பணிகளில் பங்கேற்க சென்னை மாவட்ட கழகத் தோழர்கள் செந்தில் (எப்.டி.எல்.), அருண், பிரபாகரன், ஏசுகுமார், விவேக் மனோகர், சு. குமார், அசோக் ஆகியோர் ஒரு வாரத்துக்கு முன்பே சேலம் சென்று மாநாட்டுக்கு நன்கொடை திரட்டும் பணியில் ஈடுபட்டனர். காலை மாலை இரு வேளையிலும் கடைகடையாகச் சென்று பல்லா யிரக்கணக்கான துண்டறிக்கை களை வழங்கி நன்கொடை திரட் டினர். மாநாட்டுக்கு அடித்தளமாக முழு பொறுப்பேற்று செயல்பட்ட சேலம் கிழக்கு மாவட்ட செய லாளர் டேவிட் அலுவலகத் திலேயே தோழர்கள் தங்கி மாநாட்டுப் பணிகளை செய்தனர். மாநாட்டுப் பணியில் மக்களை சந்தித்தது மறக்கவியலாத மகிழ்ச்சியான நினைவுகளாக மனத்தில் பதிந்து விட்டதை தோழர்கள் உற்சாகத்துடன் பகிர்ந்து கொண்டனர்.
- 'வேத மரபை மறுப்போம்; வெகு மக்கள் உரிமை மீட்போம்' என்ற முழக்கம், மாநாட்டின் முழக்கமாக முன் வைக்கப்பட்டது. இதே முழக்கத்தை முன் வைத்து பள்ளத்தூர் நாவலரசன் எழுதிய பாடலை காலை மாலை இரு அரங்குகளிலும் உணர்ச்சியுடன் பாடினர்.
- காலத்தின் அறைகூவலை சந்திக்க தோழர்கள் முன்னெடுக்க வேண்டிய செயல்திட்டங்களை நெஞ்சில் ஏற்றி உற்சாகத்துடன் ஊர் திரும்பினர், கழகச் செயல் வீரர்கள்.

களங்கள் காத்திருக்கின்றன.

**தொகுப்பு : விடுதலை இராசேந்திரன்**








# கழகத் தலைவருக்கு ‘மகிழுந்து’ வழங்கியது கழகம்

(முதல் பக்கத் தொடர்ச்சி)

மூட்ட வேண்டும்’ என சொன்னவர் பாம்பாட்டி சித்தர். திருமூலர் தனது பாடல்களில் பார்ப்பன வேத மரபுகளை அதன் பித்தலாட்டங்களை தோலுரித்துக் காட்டினார். முதலில் பல்லவர் காலத்தில் தான் பார்ப்பனியம் கொடிகட்டி பறந்தது. பார்ப்பன வேதபாட சாலைகளை பல்லவ மன்னர்கள் ஒழுங்குபடுத்தி கொடுத்தனர். பார்ப்பன வேத மரபை பயிற்றுவிக்க பிரம்மதேயமாக ஆயிரக்கணக்கான வேலி நிலங்கள் கொடுக்கப்பட்டன.

தமிழ் வளர்ச்சிக்கு ஒரு வேலி நிலம் கூட அளிக்கப்படவில்லை. இவையெல்லாம் சித்தர்கள் பாடல்களாக எழுதி வைத்துள்ளனர். பார்ப்பன மேலாண்மையை மட்டும் தூக்கி பிடிக்கும் பார்ப்பன வேத மரபுகள் முற்றிலுமாக அழித்தொழிக்கப்பட வேண்டும்” எனக் குறிப்பிட்டார்.

**பூங்குழலி**

வள்ளலாரின் சன்மார்க்கத்தில் வேதமரபு மறுப்பு என்கிற தலைப்பில் பூங்குழலி உரையாற்றினார். சைவ சமயத்திலிருந்து விலகி நின்றவர் வள்ளலார். வள்ளலார் உருவ வழிபாட்டை, புரோகித சடங்குகளை மறுத்தோடு, காவிக்கு பதிலாக வெள்ளுடை தரித்தார். பெரியாரின் சுயமரியாதை இயக்கம் 1935ஆம் ஆண்டிலே வள்ளலாரின் 6ஆம் திருமுறைகளை தொகுத்து ‘குடிஅரசு’ பதிப்பகம் சார்பில் நூலாக வெளியிட்டுள்ளதை சுட்டிக் காட்டினார்.

நிறைவாக இளம்பிள்ளை சி. தங்கதுரை நன்றி கூறினார்.

**‘நிமிர்வோம்’ வெளியீடு**

தொடர்ந்து, திராவிடர் விடுதலைக் கழகத்தின் புதிய மாத இதழான ‘நிமிர்வோம்’ மாத இதழ் வெளியீடு நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆகியோர் முன்னிலையில் ‘தலித் முரசு’ இதழ் ஆசிரியர் புனித பாண்டியன் ‘நிமிர்வோம்’ மாத இதழை வெளியிட கழகத் தோழர் திருப்பூர் சங்கீதா முதல் பிரதியை பெற்றுக் கொண்டார்.

இளம்பிள்ளை சி.தங்கதுரை நன்றியுரையுடன் மாநாட்டின் முதலாம் கருந்தரங்கு அமர்வு நிறைவடைந்தது.

மதிய உணவு இடைவேளைக்கு பிறகு திருச்சி விரட்டு வீதிநாடகக் குழுவினரின் வீதி நாடகம் சிறப்புடன் நடைபெற்றது.

**கலை, இலக்கியங்களில் வேத மரபு**

மாநாட்டின் இரண்டாவது அமர்வாக, கலை இலக்கியங்களில் வேத மரபு என்கிற தலைப்பில் கருத்தரங்கம் தொடங்கியது.

சேலம் மாநகர செயலாளர் ஜே.பிரபு வரவேற்புரையாற்றினார். சேலம் மாநகர அமைப்பாளர் மோ.பாலு, சிந்தாமணியூர் கோ. பிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ‘கலை, இலக்கியங்களில் வேத மரபு’ என்கிற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கை கழகப் பரப்புரைச் செயலாளர் தூத்துக்குடி பால் பிரபாகரன் நெறிப் படுத்தினார். அவர் தனது உரையில்,

“ஆரியர்களுக்கு கடவுளைவிட புரோகிதமும், வேள்விகளும் தான் முக்கியமாக கருதினார்கள். வேதங்களை எழுதாக் கிளவி என்றும், அதை சூத்திரர்கள் படிக்க மற்றும் கேட்கக் கூடாது என்பதற்காக கேளாக் கிளவி என்றும் சொன்னார்கள். ஆரியர்களின் தர்ம நூலான ‘சத்பதா பிராமணம்’ என்ற நூலில் பார்ப்பனர்கள் ரிஷி மரபில் இருந்து வந்தவர்கள் என்றும், அவர்கள் கடவுளுக்கு எல்லாம் மேலான கடவுள்கள் என்றும், அனைத்து கடவுள்களும் அவர்களுக்குள் அடக்கம் என்றும் சொல்லி இருக்கிறது. கடவுள் மந்திரத்திற்கு கட்டுப்பட்டவர். மந்திரம் எங்களுக்கு கட்டுப்பட்டது என்றனர். இத்தகைய வேத மரபுகளும் முற்றிலுமாக ஒழிக்கப்பட வேண்டும்” என குறிப்பிட்டார்.

தொடர்ந்து, ‘கலை, இலக்கியங்களில் வேத மரபு மறுப்பு’, ‘தலைவாணரின் பாத்திரங்களில்’ என்ற தலைப்பில் எழுத்தாளர் வேமதிமாறன், ‘பாரதிதாசன் பாடல்களில் என்கிற தலைப்பில் பேராசிரியர் மணி கோ. பன்னீர் செல்வம், ‘விந்தனின் படைப்புகளில்’ என்ற தலைப்பில் முனைவர் வி.ஜனார்தனன் (இவர் விந்தனின் மகன்), ‘எம்.ஆர்.ராதாவின் நடிப்பில்’ என்கிற தலைப்பில் பேராசிரியர் சரோன் (இவர் நடிகவேள் குறித்து ஆவணப்படம் தயாரித்து வருகிறார்), ‘நவீன தமிழ்ப் படைப்புகளில்’ என்ற தலைப்பில் பேராசிரியர் சுந்தர வள்ளி ஆகியோர் சிறப்பாக உரையாற்றினர்.

முடிவில் மு.பெ. சரவணன் நன்றி கூறினார்.

மாநாட்டின் இறுதி நிகழ்வாக திறந்தவெளி மாநாடு சேலம் போஸ் மைதானத்தில் அமைக்கப்பட்ட தவத்திரு குன்றக்குடி அடிகளார் நினைவு மேடையில் சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் மாநாட்டுக்கு முழு பொறுப்பேற்று உழைத்த இரா. டேவிட் தலைமையில் தொடங்கியது. மைதானம் முழுதும் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது.

தொடக்கத்தில் திருச்சி விரட்டு குழுவினரின் பறைமுழக்க நிகழ்ச்சி நடைபெற்றது. அனைவரை யும் வரவேற்று, மாநாட்டு அரங்கப்பணி உள்ளிட்ட பணிகளை பொறுப்பேற்று கடுமையாக உழைத்த சேலம் கிழக்கு மாவட்ட பொருளாளர் ஏற்காடு அ.பெருமாள் வரவேற்புரையாற்றினார். கழகச் செயல் வீரர்கள் சேலம் மாவட்ட அமைப்பாளர் டைகர். பாலன், சேலம் மேற்கு மாவட்ட செயலாளர் சி.கோவிந்தராசு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தொடக்கத்திலேயே மாநாட்டின் ஒற்றைத் தீர்மானத்தை மாநாட்டு தலைவர் கொளத்தூர் மணி முன்மொழிந்தார்.

தொடர்ந்து, தமிழ்நாடு அறிவியல் மன்ற மாநில அமைப்பாளர் திருப்பூர் சிவகாமி, வேத மரபில் பெண்கள் இழிவுபடுத்தப்படுவதை விரிவாக விளக்கினார். வடலூர் தலைமை சுத்த சன்மார்க்க சங்க மாநில தலைவர் படப்பை இரா. பால கிருட்டிணன், கழகப் பொருளாளர். திருப்பூர் துரைசாமி, கழக அமைப்பு செயலாளர் ஈரோடு ரத்தினசாமி உரையாற்றினார்.

தொடர்ந்து ‘தலித் முரசு’ ஆசிரியர் புனித பாண்டியன் சிறப்புரையாற்றினார்.

அவர் தனது உரையில்,

“வேத மரபை வீழ்த்துவதற்கு பவுத்தம் தான் வலிமையான ஆயுதம். பவுத்தம் ஒரு மதமல்ல; அது ஒரு வாழ்க்கைப் பண்பாடு. இந்த மாநாட்டில் பவுத்தத்திற்கு உரிய முக்கியத்துவம் தரப்படவில்லை” என்று குறிப்பிட்டதோடு,

“இன்றைக்கும் அனைத்திலும் கோலோச்சும் இந்துத்துவத்தை எதிர்த்து பெரியார், அம்பேத்கர் நடத்திய போரை மீண்டும் நாம் தொடர்ந்து நடத்த வேண்டியது மிகவும் அவசியமானது” என்றார்.

**தாலி நீக்கிய பெண்கள்**

பெரியார் இயக்க மாநாட்டு மேடைகளில் முத்தாய்ப்பாக நடக்கும் பெண்களின் அடிமை சின்னமாம் தாலி அகற்றும் நிகழ்வு நடைபெற்றது. பொதுவாக கழக மேடைகளில் இணையரின் தாலியை கணவர் அகற்றுவார். ஆனால், திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய இம் மாநாட்டில் சிறப்பு அம்சமாக கணவர் கட்டிய அடிமைத் தாலியை பெண் தோழர்களே அகற்றி கணவர் கையில் கொடுத்தனர். இந்த பண்பாட்டுப் புரட்சியைக் கூடியிருந்த கூட்டத்தினர் பலத்தக் கரவொலி செய்து வரவேற்றனர்.

திருச்செங்கோடு தனலெட்சுமி - வைரவேல், திருச்செங்கோடு பிரியா - மணி, சங்கிரி கனகா - தீலீப் குமார், திருப்பூர் சங்கீதா - தனபால் கோவை ராஜாமணி - கிருஷ்ணன் ஆகிய இணையர்கள் மேடையில் பெண் அடிமை சின்னமாக இருக்கக் கூடிய தங்கள் தாலியை தாங்களே அகற்றி தங்கள் கணவர் கையிலேயே கொடுத்தனர்.



**‘சங்கீதா மெடிக்கல்’ பாலசுப்பிரமணியம் ஒரு இலட்சம் நன்கொடை**

**மாநாட்டில் கழகத் தோழர் சேலம் ‘சங்கீதா மெடிக்கல்’ பாலசுப்பிரமணியம் மாநாட்டுக்கு ரூ.50,000-மும், கழகக் கட்டமைப்பு நிதிக்கு முதல் தவணையாக ரூ.50,000-மும் கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடம் வழங்கினார்.**

**கழக ஏட்டுக்கு சந்தா**

‘புரட்சிப் பெரியார் முழக்க’த்திற்காக முதல் கட்டமாக திரட்டப்பட்ட சந்தா தொகைகளை, சூலூர் பன்னீர்செல்வம், ஈரோடு வேணுகோபால் ஆகியோர் கழக தலைவர் மற்றும் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரனிடம் ஒப்படைத்தனர்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பிரச்சாரத் திற்காக புதிதாக வாங்கப்பட்ட வாகனத்தின் சாவியை அறிவியல் மன்ற அமைப்பாளர் திருப்பூர் சிவகாமி, கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடம் பலத்த கரவொலிக்கிடையே வழங்கினார். தலைமைக் கழகச் செயல்பாட்டிற்காக புதிய ஆட்டோ வாங்குவதற்கான நிதியை கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரனிடம் பலத்த கரவொலிக் கிடையில் வழங்கினார்.

மாநாட்டிற்காக மிக சிறப்பாக சுவரெழுத்து பணிகளில் ஈடுபட்ட விழுப்புரம் அய்யனார், ராமர், ஆத்தூர் மகேந்திரன், காவேரிப்பட்டினம் பிரபு ஆகியோரை பாராட்டி கழகத் தலைவர் இயக்க நாள்காட்டிகளை பரிசளித்தார்.

மாநாட்டிற்காக களப்பணியாற்றிய நாற்பதுக்கும் மேற்பட்ட தோழர்களுக்கு கழக நாள்காட்டியை வழங்கி கழகத் தலைவர் சிறப்பித்தார். மாநாட்டிற்காக பத்து நாள்களாக கடைவீதி வசூலை முன்னின்று நடத்திய குழுவின் தலைவர் சூலூர் பன்னீர்செல்வம், கழகத் தோழியர்கள் திருப்பூர் சங்கீதா, திருப்பூர் பார்வதி, திருப்பூர் முத்துலெட்சுமி, இராசிபுரம் சுமதி, மேட்டூர் பகவதி, இளம்பிள்ளை திவ்யா உள்ளிட்ட கழகத் தோழர்களுக்கு நாள்காட்டிகளை பரிசளித்து கழகத் தலைவர் பாராட்டினார்.

இறுதியாக, கழகத் தலைவர் கொளத்தூர் மணி, வேத மரபு மறுப்பு மாநாட்டு நோக்கத்தை விளக்கி உரையாற்றினார். அவர் தனது உரையில்,


“வேத மரபுகளை நாம் யாரும் படித்ததில்லை. பள்ளியில் நாம் திருக்குறளை படித்து இருக்கிறோம். வாழ்கையில் நாம் திருக்குறளை நடைமுறைபடுத்தி யதில்லை. ஆனால் எவர் ஒருவருக்கும் தெரியாத மனுதர்மத்தை, மனு சாத்திரத்தை வேதத்தை நம் மூளையில் ஏற்றியிருக்கிறார்கள். சூழ்ச்சிக்காரர்களின் பலிக்கு ஆளாகி வாழ்க்கையில் நாம் கடைபிடித்து கொண்டிருக்கிறோம். வேதத்தை ஒரு பெரிய தோற்றமாக நம்மிடையே உண்டாக்கி வைத்திருக் கிறார்கள். வேதத்தில் உலகத்தில் உள்ள அரிய செய்திகளை சொல்லியிருப்பதாக நாம் நினைத்துக் கொண்டு இருக்கிறோம்.

பார்ப்பனர்களும், பார்ப்பன ஏடுகளும் எதைப் பற்றி பேசினாலும் அது வேதத்தில் இருக்கிறது என்பார்கள். வேத கணிதம் என்று சொல்வார்கள்.

வேதங்கள் என்பது மக்களுக்கு எதிரானது. பார்ப்பன மேலாண்மையை நிலைநிறுத்திடவே வேதங்கள் படைக்கப்பட்டன.

பார்ப்பனர்களை வெறும் மனிதர்களாக மட்டும் நினைக்கக் கூடாது. மாறாக அவர்கள் ஒரு தத்துவமாக நினைக்கப்படவேண்டும் என்பதைத் தான் வேதங்கள் நிலைநிறுத்துகின்றன. அந்த தத்துவம் நம்மை படிப்படியாக பிரிக்கிறது. மேல்கீழாக வைக்கிறது. இழிவுப்படுத்துகின்றன. இந்நாட்டில் பெரும்பான்மை மக்கள் இழிவானவர் களாக, உரிமை அற்றவர்களாக, அடிமைகளாக, தாசர்களாக கேவலப்படுத்தப்படுகிறார்கள். சரி

(4ஆம் பக்கம்)



**கழகத் தலைவருக்கு வழங்கப்பட்ட மகிழுந்து**

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# தமிழர்களே புரோகித சடங்குகளை புறக்கணிப்பீர்!

## சேலம் மாநாட்டின் ஒற்றைத் தீர்மானம்




*24–12–2016 அன்று சேலத்தில், சேலம் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக நடத்தப்பட்ட சித்தர்கள், வள்ளலார், பெரியார் அடிச்சுவட்டில் 'வேத மரபு மறுப்பு மாநாட்டில்' கழகத் தலைவர் கொளத்தூர் மணி முன்மொழிந்த ஒற்றை தீர்மானம் :*

வேதங்கள் - பகவத்கீதை - மனுஸ்மிருதி அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட வேத மரபு - பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற தமிழரின் திருக்குறள் மரபுக்கு எதிரானதாகும்.

வேதங்கள் உருவான காலத்திலிருந்து அதற்கு எதிர்ப்புகளும் தோன்றி விட்டன. பார்ப்பனீயம் இந்த எதிர்ப்புகளை சாதுரியமாக வீழ்த்தியிருப்பதை வரலாறுகள் உணர்த்துகின்றன. சார்வாகர் - சமணர் - புத்தர் - சித்தர்கள் - வடலூர் வள்ளலார் போன்று பலரும் போர்க் கொடி உயர்த்தி இருக்கிறார்கள். இறுதியாக வேதமதமாகிய பார்ப்பன மதம் பிரிட்டிஷ் ஆட்சியைப் பயன்படுத்தி 'இந்து' என்ற வலைக்குள் வெகு மக்களை நிர்பந்தமாக உள்ளிழுத்துக் கொண்டது. இதன் வழியாக சமூக அதிகாரங்களை தனது வசமாக்கிக் கொண்டு அதனூடாக தன்னை அரசியல் அதிகார சக்தியாகவும் மாற்றிக் கொண்டது. அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி - கல்வி வேலைவாய்ப்பு உரிமைகளை, சக இந்துக்களான பார்ப்பனர் அல்லாத ஒடுக்கப்பட்ட மக்களுடன் பகிர்ந்துகொள்ள மறுத்தது.

இந்த ஒடுக்கு முறைகளுக்கு எதிராக வரலாற்றில் உருவானது தான் பார்ப்பனர் அல்லாதார் இயக்கம் இப்பொழுது இந்து என்று அழைக்கப்படும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும், பெண்களுக்கும், வெகுமக்களுக்கும் கிடைத்துள்ள பல உரிமைகள் வேத மத மரபை எதிர்த்து நடத்திய போராட்டங்களினால் தான் என்பதை நமது மக்கள் கருத்தில் கொள்ள வேண்டும்.

உருவ வழிபாட்டை மறுத்த வேத மரபு, கோவில்களை கையகப்படுத்தியது; வேத மரபுக்கு எதிரான உருவ வழிபாடு நடக்கும் கருமாரியம்மன் கோவில், சமயபுரம் மாரியம்மன் கோவில் போன்ற பார்ப்பனரல்லாதாரின் அம்மன் கோயில்களையும் அங்கே பொருளாதர வளம் மிகுந்த போது தங்கள் வசமாக்கிக் கொண்டுவிட்டது. வேதத்தை மட்டுமே வணங்கும் ஸ்மார்த்த பார்ப்பன காஞ்சி சங்கர மடம் காஞ்சி காமாட்சி கோவிலை கையகப்படுத்திக் கொண்டது. வேத வழிபாட்டை மறுத்த வடலூர் வள்ளலாரின் சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தை இந்து அடையாளமாக்கி இந்து அற நிலையத் துறையின் கீழ் கொண்டு வரப்பட்டு விட்டது.

பெரும் சொத்துக்கள் செல்வங்களைக் கொண்ட தில்லை நடராஜன் கோவிலை நிர்வகிக்கும் உரிமை தீட்சதர்களுக்கே உள்ளது என்றும் தாங்கள் நேரடியாக 'ஆண்டவனால்' அனுப்பி வைக்கப்பட்டவர்கள் என்று கூறி வழக்கு தொடர்ந்து தீர்ப்பையும் தங்களுக்கு சாதகமாக உச்ச நீதிமன்றத்திலிருந்து பெற்றுக் கொண்டு விட்டார்கள்.

தங்களுக்குள்ளே பிரம்மத்தை அடைய வேண்டும் என்ற கொள்கை கொண்ட வேத மதம் அதற்கு மாறாக இப்படி கோவில்களை தங்கள் வசமாக்கிக் கொண்டு விட்டது. கர்ப்பகிரகத்தில் அர்ச்சனை செய்யும் உரிமையும் தன் வசமாக்கிக் கொண்டு விட்டது. திருநெல்வேலி நெல்லையப்பர், திருவனந்தபுரம் பத்மநாபசாமி கோவில்களில் சங்கராச்சாரிகளையே உள்ளே அனுமதிக்காத காலம் இருந்தது; இருக்கிறது. கோவிலுக்குள் நுழையும் உரிமை ஸ்மார்த்த பார்ப்பனர்களுக்கு (பிராமணர்களுக்கு) கிடையாது என்பதற்கு இது சான்று. இப்படி ஏராளமாக பட்டியலிட முடியும்.

வேத மரபுக்கு எதிராக நமது முன்னோர்களான, சார்வாகர்கள், சித்தர்கள், சமணர்கள், புத்தர் வள்ளலார் தொடங்கிய போரை, பெரியார் தமிழகத்தில் தீவிரமாக முன்னெடுத்தார். வடபுலத்தில் துக்காராம், கபிர்தாசர், குருநானக், ஜோதிபாபுலே, அம்பேத்கர் போன்றோர் தொடர்ந்து போராடினார்கள். நமது முன்னோர்கள் தொடங்கிய போர் இன்னும் முடிவடையவில்லை வேத மரபு புதிய புதிய அவதாரங்களில் தனது ஆதிக்கத்தை - சமூக சுரண்டலை உறுதிப்படுத்தி வருகிறது.

எந்த வேத மரபு நமது மக்களை அடிமைப்படுத்தியதோ, அதே வேத பார்ப்பனியம் நமது தமிழர் பண்பாட்டில் ஊடுருவி இப்பொழுதும் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கிறது. தமிழர் வீட்டு திருமணங்களில், தமிழர் வழிபாட்டு முறைகளில் தமிழர்கள் பெயர் சூட்டலில், தமிழக வீடு திறப்பில், சடங்குகளில் பார்ப்பன புரோகிதமே ஆதிக்கம் செலுத்தி, தமிழ் மொழியையும் தமிழினத்தின் மாண்புகளையும் அவமதித்து வருகிறது. அதே வேத மத சக்திகள் தான் இப்போது ஆட்சி அதிகாரத்தின் வழியாக "இந்துத்துவம்" என்ற அரசியல் முழக்கத்தோடு - சமஸ்கிருத வேத பண்பாடுகளை திணிக்கும் நடவடிக்கைகளை செயல்படுத்தி வருவதோடு மட்டுமின்றி தமிழ் நாட்டையும் தனது அரசியல் அதிகாரத்திற்குள் கொண்டு வரும் சூழ்ச்சிகளில் இறங்கியிருப்பதை தமிழ் மக்களுக்கு சுட்டிக்காட்டி எச்சரிக்கை விடுக்கிறோம்.

இந்த நிலையில் வேத புரோகிதத்தை அனைத்து நிலைகளிலும் சமூக நிகழ்வுகளிலும் புறக்கணித்து, அதே ஆபத்துக்களை கொண்ட இந்துத்துவா அரசியல் சக்திகளையும் புறந்தள்ளி நமது தன்மான அடையாளத்தை நெஞ்சுயர்த்தி பறைசாற்றுமாறு அனைத்து தமிழ் மக்களையும் இம் மாநாடு அறை கூவி அழைக்கிறது.

வேத மரபை மறுப்போம் - வெகுமக்கள் உரிமையை மீட்போம் என்ற முழக்கத்தை தன்மான தன்னுரிமைக்கான முழக்கமாக்கி மக்களை அணி திரட்ட இந்த மாநாடு உறுதி ஏற்கிறது.

---

*(3ஆம் பக்கத் தொடர்ச்சி)*

*பாதியாக இருக்கின்ற பெண்களை அவமதிக்கிறது.*

*பார்ப்பனர்களில் திருமணங்கள் வைதீக முறைப்படி நடக்கின்றது. நமது திருமணங்கள் புராணத்தின் அடிப்படையில் நடக்கிறது. நமக்கு வைதீக திருமண முறை இல்லை. இந்துக்களே ஒன்று சேருங்கள் எனக் கூறுபவரிடம் நாம் இத்தகைய பாகுபாடு திருமண முறைகள் பற்றி கேள்வி கேட்க வேண்டும்.*

*இந்து மதம் என்பது அந்நிய நாட்டு மதம். இன்றைக்கு பெரும்பான்மை மக்களில் மதமாக நம்மிடையே பார்ப்பனர்கள் திணித்திருக்கிறார்கள்.*

*இந்தியாவில் தோன்றிய அனைத்து சிந்தனை மரபுகளுமே, வேதத்தை வேத மரபுகளை எதிர்த்து தோன்றியவைதான். சமணமாக இருந்தாலும், பவுத்தமாக இருந்தாலும், பின்னால் தோன்றிய சீக்கிய மதமாக இருந்தாலும் வேத மரபுகளை பிரிவினைகளை, ஜாதிய அடுக்குமுறைகளை தகர்த்தெறிய தோன்றியவை தான்.*

*அது கபிர்தாசராக, வடநாட்டு துக்ககாராமாக இருந்தாலும் இங்கிருந்த சித்தர் களோ, வள்ளலாரோ, திருமூலரோ, கபிலராக இருந்தாலும் இவர்கள் எல்லோரும் வேத மரபிற்கு எதிராகவே இருந்தனர். எல்லாவற்றையும் விட தமிழகத்தில் திருக்குறள் என்பது முற்று முதலாக வேதத்திற்கு எதிராகவே எழுதப் பட்டது.*

*பெருந்தமிழனாக இராஜராஜ சோழனை, இன்றைக்கு நவீன தமிழ் தேசிய வாதிகள் முன்னிறுத்துகிறார்கள். இராஜராஜசோழன் தமிழுக்கு ஒரு நன்மை கூட செய்ய வில்லை. மாறாக பார்ப்பனர்களுக்கு வேதத்திற்கும், வைதீகத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்தான் என்பதே உண்மையாகும்.*

*எனவே ஆரியர்கள் பண்பாட்டு படையெடுப்பு மூலமே நம்மை அடிமைப்படுத்தினர்" என்று குறிப்பிட்டார். மாநாட்டின் முடிவில் கழகச் செயல் வீரர் ஆத்தூர் ந.மகேந்திரன் நன்றி கூறினார்.*

*பெரியார் இயக்கங்கள் இதுவரை நடத்திய மாநாடுகளில் திராவிடர் விடுதலைக் கழகம், சேலத்தில் நடத்திய வேத மரபு மறுப்பு மாநாடு கழகத் தோழர்களின் கடும் உழைப்பால் மிகப் பெரிய வெற்றி மாநாடாக நடந்து கழக வரலாற்றில் தனி முத்திரையை பதித்தது.*

**செய்தி : மன்னை காளிதாசு**

**படங்கள்:** கொளத்தூர் விஜி,
கபிலன் ஸ்டுடியோ.
மேலும் படங்கள் அடுத்த இதழில்

**கடந்தாண்டு கழக முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு – அடுத்த இதழில்**

**'புரட்சிப் பெரியார் முழக்கம்' முக்கிய அறிவிப்பு**

டிசம்பர் மாதத்தோடு சந்தா முடிவடையும் வாசகர்களுக்கு ஜனவரியிலிருந்து இதழ் அனுப்புவது நிறுத்தப்படும். தோழர்கள் சந்தாவை புதுப்பிக்க வேண்டுகிறோம்.

**– நிர்வாகி**

**ஆண்டுக்கட்டணம் ரூ.200**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 29th December 2016

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN